செ.வெ.எண் : 111 நாள் : 31.07.2021

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மீன்வளர்ப்பினை விரிவுபடுத்திட மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் நீர்இருப்பு 0.25 ஹெக்டேர் முதல் 1.00 ஹெக்டேர் வரை உள்ள பண்ணைக்குட்டை மீன்வளர்ப்போர் பயனடையலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

-----------------------------------------------------------------------------------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் "மீன்வளர்ப்பினை விரிவுபடுத்திட மானியம் வழங்கும் திட்டம் " செயல்படுத்தப்படவுள்ளது. நீர்இருப்பு 0.25 ஹெக்டேர் முதல் 1.00 ஹெக்டேர் வரை உள்ள பண்ணைக்குட்டை மீன்வளர்ப்போர் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். பண்ணைக்குட்டை அமைக்க 50% மானியமும் (ரூ.3,50,000/-) செயல்பாட்டு செலவினத்திற்கு உள்ளீட்டு மானியமாக 40% (ரூ.60,000/-) வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலம், 166, வடக்கு கடற்கரை சாலை, மீன்துறை வளாகம், தூத்துக்குடி. தொலைபேசி எண்: 0461-2320458 என்ற முகவரியில் வார வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.